# பவானி நகராட்சி

இந்நகராட்சியில் மொத்தம் 27 வார்டுகள் உள்ளன. 2011 மக்கள்தொகை கணக்கெடுப்பின் படி 39225 மக்கள்தொகை ஆகும். இந்நகராட்சியில் தினமும் 10.5 MT குப்பைகள் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

**முதன்மை சேகரிப்பு விவரம்:**

| | | |
|---|---|---|
| 1 | நகராட்சியின் நிரந்தர துப்புரவு பணியாளர்கள | **54** |
| 2 | அயர்பணி ஒப்படைப்பு முறை துப்புரவு பணியாளர்கள | **63** |
| 3 | இந்நகராட்சி பகுதயில் மொத்தமுள்ள வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களின் எண்ணிக்கை பரப்புரையாளர்களின் கணக்கெடுப்பின் படி | வீடுகள் - 10949<br>கடைகள்- 1434<br>**மொத்தம் - 12383** |
| 4 | **குப்பை சேகரிக்கும் பணிக்கு பயன்படுத்தப்படும் வாகனங்கள்** | தள்ளுவண்டிகள் - 40 எண்ணிக்கை, BOV - 20 எண்ணிக்கை, (வீடுகளுக்கு) |
| | | மினி ஆட்டோ (LCV) -1 வணிக நிறுவனங்களுக்கு |

மேற்குறிப்பிட்ட 12383 குப்பைகள் உற்பத்தியாகும் இடங்கள் தோறும் களப்பணியாளர்கள் நேரடியாகச் சென்று 100 சதவீதம் குப்பை உருவாகும் இடத்திலேயே சேகரிக்கப்பட்டு வருகிறது.

**இந்நகராட்சியில் உருவாகும் குப்பையின் வகைகள் :**

| | | |
|---|---|---|
| 1. | மக்கும் கழிவுகள் | 6 MT |
| 2. | பிளாஸ்டிக் மற்றும் மறுசுழற்சி கழிவுகள் | 3.5 MT |
| 3. | சாக்கடை மண் (Silt) | 0.5 MT |
| 4. | எஞ்சிய மற்றும் இதர கழிவுகள் - | 0.5 MT |
| | **மொத்தம்** | **10.5 MT** |

இந்நகராட்சி பகுதியில் வசிப்பவர்களில் தனிநபர் உருவாக்கும் கழிவு 273 Gram per day (Per capita waste) ஆகும்.

**இரண்டாம் நிலை சேகரிப்பு விவரம்:**

வீடுவீடாக சேகரிக்கப்படும் கழிவுகளில் மக்கும் கழிவுகளை மினி ஆட்டோ மூலமும், உலர்கழிவுகளை டிப்பர் லாரி மூலமும், தினமும் அப்புறப்படுத்தப்பட்டு வருகிறது. இரண்டாம நிலை சேகரிப்புக்கு மொத்தம் 4 வாகனங்கள் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**மிகை கழிவுகள் உருவாக்குபவர்களின் விபரம்(Bulk Waste Generators)**

இந்நகராட்சி பகுதியில் 3 மிகைக்கழிவு உருவாக்குபவர்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளவர்களில் 2 பேர் தங்கள் சொந்த இடத்திலேயே மக்கும் கழிவுகளை அப்புறப்படுத்த வசதியினை ஏற்படுத்தியுள்ளார்கள்.

மீதமுள்ள 1 மிகை கழிவு உற்பத்தியாளர் தங்கள் நிறுவனத்தில் சேகரமாகும் மக்கும் கழிவுகள் (திருமணம் மண்டபம்) அவர்களது பண்ணைக்கு அனுப்பி வைத்து விடுகிறார்கள்.

**நுண் உரக்குடில் மையம்(Micro Composting Centre)**

இந்நகராட்சி பகுதியில் வார்டு எண் 4 மற்றும் வார்டு எண் 11 ஆகிய இரண்டு இடங்களில் நுண் உரக்குடில் மையம் செயல்படுத்தப்படுகிறது. தினந்தோறும் 6.00 மெ.டன் மக்கும் கழிவுகள் சேகரிக்கப்பட்டு நுண் உரக்குடில் மூலம் உரமாக்கப்பட்டு விவசாய நிலங்களுக்கு பயன்படுத்தும் வகையில் அனுப்பப்பட்டு வருகிறது.

**தூய்மை இந்தியா திட்டம்:**

## ஈரோடு மாவட்டம் - பவானி நகராட்சி
## திறந்த வெளி கழிப்பிடம் இல்லாத நகராட்சி குறித்த விபரம்

| நகராட்சியின் பெயர் | பவானி நகராட்சி |
|---|---|
| மக்கள் தொகை | 39225 |
| மொத்த வார்டுகளின் எண்ணிக்கை | 27 |
| மொத்த வீடுகளின் எண்ணிக்கை | 11166 |
| கழிவறை உள்ள வீடுகளின் எண்ணிக்கை | 10072 |
| கழிவறை இல்லாத வீடுகளின் எண்ணிக்கை | 1094 |
| கழிவறை இல்லாத வீடுகளின் மக்கள் தொகை | 4376 |
| சமுதாய மற்றும் பொது கழிப்பிடங்களின் எண்ணிக்கை | 31 |
| கழிப்பிட இருக்கைகளின் எண்ணிக்கை | ஆண் -117 seats ,<br>பெண் - 148 seats,<br>குழந்தைகள் -7 seats,<br>மாற்றுதிறனாளி – Nil |
| திறந்தவெளி கழிப்பிட இல்லாத (ODF +) நகராட்சியாக அறிவிக்கப்பட்ட நாள் | 19.02.2020. |